# பங்குபற்றல் புவியியல் தகவல் ஒழுங்கு அணுகுமுறையூடாக வெள்ள இடர்பாடமாக்கலும் பாதிப்பின் அளவை மதிப்பிடலும்: கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவை அடிப்படையாகக் கொண்டது

**Mangaleswaran, R* & Suthakar, K**

**ஆய்வுச் சுருக்கம்**

*வெள்ள அனர்தமும் அதனால் ஏற்படும் உயிர், உடமை பாதிப்புக்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் வருடாந்தம் ஏற்படும் ஒரு செயற்படாக இருந்து வருகின்றது. இதனால் வருடாந்தம் பொதுமக்கள் இடப்பெயர்வும் பயிரழிவு உள்ளிட்ட பொருளாதார பாதிப்புக்கள் மக்களின் இயல்பு வாழ்வை பாதித்துவருகின்றது. அவ்வகையில் இவ்வாய்வானது கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் வெள்ளப்பாதிப்புக்கு உட்படும் பகுதிகளை பொதுமக்கள் பங்களிப்பூடாக படமாக்கி பாதிப்பை மதிப்பிட்டு தணிப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்கிறது. கிராம சேகவர் பிரிவில் வெள்ள அனர்த்தத்திற்கு உட்படும் பிதேசத்தில் குடும்ப ரீதியான பாதிப்பு, விவசாயம், வெள்ளப் பாதிப்பிற்கான காரணிகள், போக்குவரத்து, தொற்றுநோய்கள் பற்றிய விபரங்கள் பிரதானமாக வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்பட்டது. வெள்ள அனர்த்த தரவுகள் அப்பகுதி கிராமசேவையாளர் வரைபடங்களுடன் கிராம சேவையாளர் தலைமையில் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்கார அமைப்பு, அரச உத்தியோகத்தர்கள், அனுபவம் மிக்க விவசாயிகள், பொது மக்களை இணைத்து பாதிப்பு பிரதேசம் அடையாளப்படுத்தப்பட்டு படமாக்கப்பட்டுள்ளது. வினாக்கொத்து மூலமான சமூக, பொருளாதார தரவுகள் புள்ளிவிபர நுட்ப முறை மூலம் தொகுக்கப்பட்டது. வெள்ளப்படமாக்கல் பிரதேசத்தின் மீது நிலப்பயயன்பாட்டுப் படம், தரையுயரப் படம், வீதி வலைப்பின்னல் படம், ஆற்றுவடி நிலம் படம், கட்டடங்களின் பரம்பல் தரவுகள் என்பன புவியியல் தகவல் ஒழுங்கு தொழில் நுட்பத்தின் மூலம் ஒன்றின் மேல் ஒன்று படிவாக்கம் செய்யப்பட்டு சமூக பொருளாதாரப் பாதிப்புக்கள் மதிப்பிடப்பட்டது. ஆய்வின் முடிவுகளை நோக்கினால் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 2012 ஆண்டில் வெள்ள அனர்த்தினால் 312.22 கெக்டயர் மேட்டுப்பயிர்ச் செய்கையும் 1768.31 கெக்டயர் நெற்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏறத்தாழ 2900 குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். இக்காலப்பகுதியில் 1622 தற்காலிக வீடுகளும் 438 அரை நிரந்தர வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் 96.75 கி.மீ வீதிகள் வெள்ளத்தால் இக்காலப்பகுதியில் பாதிக்கப்பட்டுள்ளது. பாதை சீரின்மையால் கண்டாவளை, கல்மடுநகர், உமையாள்புரம், தட்டுவான்கொட்டி மோசமாக பாதிக்கப்படுவதுடன் தட்டுவன்கொட்டி கிராமம் வெள்ளப்பாதிப்பால் தரைப்பகுதியுடன் வீதிப்போக்குவரத்து துண்டிக்கப்பட்டு தனித்தீவாக்கப்படுகிறது. எளிதில் பாதிப்புள்ளாகும் மக்களில் குறிப்பாக 5 வயதிற்கு குறைந்த 555 பேரும், கர்ப்பவதிகள் 177, விதவைகள் 597, முதியோர் 179, ஊனமுற்றோர் 162 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளப் பாதிப்பை குறைப்பதற்கு ஊரியான், முரசுமோட்டை, கல்மடுநகர், கோரக்கன்கட்டு. பெரியகுளம், புன்னை நீராவி கிராம சேவையாளர் பிரிவில் கால்வாய்கள் பிரதானமாக புனரமைக்கப்பட வேண்டும். வீட்டுப்பாதிப்புக்களை குறைப்பதற்கு 2060 குடும்பங்களிற்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்பட வேண்டும். மேலும் வெள்ள பாதிப்புக்கு தாக்கப்பிடிக்கும் பொருத்தமான பயிர்களை பயிரிடல், காப்புறுதி செயற்பாடுகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.*

**பிரதான சொற்கள்:** பங்குபற்றல் புவியியல் தகவல் தொழில் நுட்பத் தொகுதி, வெள்ளப்படமாக்கல், இடர்பதிலிறுப்பு, அடுக்குகளை ஒன்றின் மேல் ஒன்று மேற்படிவாக்கம் செய்தல்.

---

To whom correspondence should be addressed: rmvaran@gmail.com

*Development Officer, Jaffna Divisional Secretariate, Jaffna.